**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 247/2020 |
| Prosecution Witness | : | **அ.சா.**1 |
| Name | : | **செல்வராஜ்** |
| Father's / Husband Name | : | **கைலாசம்** |
| Address | : | **செஞ்சேரி, பெரம்பலூர்** |
| Age | : | 54/2025 |

**தேதி : 21.01.2026**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திருமதி.ச. மோகனபிரியா சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து மட்டும் என்னுடையதுதான். **அந்த கையெழுத்து அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** தற்போது என்னிடம் காட்டப்படும் சமாதான மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **அந்த சமாதான மனு அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சம்பவத்தன்று கூட்டமாக இருந்தது. யார் அடித்தார்கள் என்று எனக்கு தெரியாது. வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீஸார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வைத்த கோரிக்கையை ஏற்று சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவித்து அரசு தரப்பு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

கடந்த 12.10.2017ம் தேதி இரவு 8.00 மணி அளவில் நான் எனது வீட்டின் முன்பு அமர்ந்துகொண்டு எதிரி ஏற்கெனவே ஊரில் வளர்க்கும் பூனைகளை யாருக்கும் தெரியாமல் எடுத்து செல்வதை பற்றி பேசிக்கொண்டிருந்தபோது ஆஜர் எதிரி அங்கு வந்து தகாத வார்த்தையால திட்டி வீட்டில் இருந்த கடப்பாறையால் எனது தலையில் அடித்து தலை, மூக்கு, முகம் மற்றும் பல்லை உடைத்து காயம் ஏற்படுத்தியதாகவும் அதற்காக மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டதாகவும் போலீஸார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரியுடன் சமாதானம் ஆகிவிட்டதால் அவரை காப்பாற்றுவதற்காக வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1(FAC)
Perambalur.